**நாள் 30.01.2023.**

**OS 150/2021 வாசா 1 கோவிந்தராஜ் மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி.**

மனை எண் 2ல் 2005 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வீட்டில்தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் இன்று வரை குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2018ம் ஆண்டு வரை சேகரும் அந்த வீட்டில்தான் இருந்தார். 2018 ம் ஆண்டில்தான் 1ம் பிரதிவாதியுடன் சண்டை போட்டுவிட்டு தனியே போய்விட்டார். அதன்பின்னர்தான் 1ம் பிரதிவாதிக்கும் சேகருக்கும் இடையே வழக்குகள் நடந்து வந்தன. சேகர் உயிருடன் இருக்கும்வரை சேகர் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கு தள்ளுபடி ஆகவில்லை. 2018 க்கு பிறகு சேகர் தன் பெற்றோருடன் வசிக்கவில்லை. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் சேகர் அவர் பெற்றோருடன் வசிக்கவில்லை தனியாகத்தான் வசித்தார். ஆனால் பெற்றோருக்கு பண உதவி செய்து வந்தார். சேகர் இறக்கும் வரை அவரது பெற்றோருடன் சுமுகமான உறவில்தான் இருந்தார். நான் சேகருக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் விவரம் அவரது பெற்றோருக்கு தெரியும். அவரது பெற்றோர் முன்னிலையில் நான் கடன் கொடுக்கவில்லை. நான் சேகருக்கு பணம் கொடுத்த விவரத்தை சேகரின் அம்மாவிடம் பணம் கொடுத்தபின்னர்தான் சொன்னேன். பணம் கொடுத்த தேதியிலும் பணம் கொடுக்கும் விவரத்தை சேகரின் பெற்றோரிடம் நான் சொல்லவில்லை. சேகரிடம் நான் வாசாஆ 1ல் கையெழுத்து வாங்கும்போதும் அவரது பெற்றோரிடம் சாட்சி கையொப்பம் எதுவும் கேட்கவில்லை. நான் கடன் கொடுத்த விவரமும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தெரியாது. வாசாஆ 1 ஆவணத்தையும் நான் சேகரின் பெற்றோரிடம் காண்பிக்கவில்லை. 4ம் பிரதிவாதி சேகரின் அம்மா என்னுடைய சகோதரி அவரிடமும் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சேகருக்கு பணம் கொடுத்த விவரத்தை சொல்லி பணத்தை திரும்பி வாங்கி தரும்படி சொல்லவில்லை. நான் அய்யம்பேட்டையில் வசிக்கிறேன். வாசாஆ 1ன் சாட்சி கையொப்பம் போட்டவர்களும் அய்யம்பேட்டையை சேர்ந்தவர்கள். அதனை கணினியாக்கம் செய்தவரும் அய்யம்பேட்டையில் வசிப்பவர். வாசாஆ 1 வாங்கிய தேதியில் சேகரிடம் நான் வேறு எந்த ஆவணமும் வாங்கவில்லை. 03.05.2021ம் தேதியில் சேகர் திருநகர் 2, 3 மனையிடத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து அவற்றை பராமரிக்கவும், அவற்றில் இருந்து வரும் வரும்படியின் கணக்கு வழக்குகளை ஒப்படைக்கவும்

எனக்கு பதிவான அதிகார பத்திரம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அதன் கணினி பதிவிறக்கம் என்னிடம் காட்டப்படுகிறது. அந்த அதிகார பத்திரம் **பிசாஆ 1**. அந்த பத்திரம் கொடுத்து 20 நாட்களில் 25.05.2021ம் தேதி கொரோனா பாதிப்பினால் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதிகார பத்திரத்தில் உள்ள சாட்சிகள் ஒருவர் பாபநாசம் மற்றொருவர் வலங்கைமான் ஊர்களைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிசாஆ 1 ஆவணப்படி நான் எந்த பரிமாற்றமும் சேகர் இறக்குவரை செய்யவில்லை. பிசாஆ 1ல் உள்ள சேகரின் கையொப்பம் உண்மையான கையொப்பம். பிசாஆ 1ல் உள்ள சேகரின் கையொப்பத்தையும், வாசாஆ 1ல் உள்ள சேகரின் கையொபப்பத்தையும் கையெழுத்து நிபுணரின் ஒப்பீட்டு ஆய்விற்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் வருமான வரி செலுத்துபவர் அல்ல. நான் அடகுகடை வைத்திருக்கிறேன். அந்த அடகுகடைக்கு எந்த வருவமான வரியும் இல்லை. அடகுகடையை ஆரம்பித்ததில் இருந்து இதுவரை நான் வருமான வரி எதுவும் செலுத்தியதில்லை. நான் கையிருப்பில் இருந்த பணத்தை கொடுத்தேன். எனக்கு IOB, City Unoin Bank ஆகியவற்றில் கணக்கு உள்ளது. அதன் வங்கி கணக்குகளை தாக்கல் செய்யவும் தயாரா இருக்கிறேன். எனக்கும் 4ம் பிரதிவாதிக்கும் எந்த வித விரேதமும் இல்லை. பேச்சு வார்த்தை இருக்கும். 4ம் பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக இறந்து போன சேகருக்கு பாத்தியப்பட்ட திருநகரில் கண்ட சொத்துக்கள் மற்றும் ஒரு சொத்தை சேர்த்து பாகப்பிரிவினை வழக்கு இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ஆமாம். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அனுப்பிய அறிவிப்பு வாசாஆ 2 க்கு 4ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு தரவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளனர். வாசாஆ 5 வில்லங்க சான்றிதழ் 01.06.2003 முதல் 12.11.2009 வரையான காலத்திற்கு உரியது. அந்த வில்லங்க சான்றிதழ் திருநகரில் கண்ட சொத்துக்கள் சம்பந்தப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யும் வரையான காலத்திற்கு வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்தால் எனக்கு கொடுத்த அதிகாரம் பற்றி தெரிந்துவிடும் என்பதற்காக நான் மறைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல. இறந்து போன சேகர் என்னிடம் எந்த ஒரு கடனும் பெற்றதில்லை என்றும் வாசாஆ 1 ஆவணத்தில் சேகரின் கையொப்பம் மோசடியாக தயார் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டடது என்றால் சரியல்ல. வாசாஆ 1ல் உள்ள கையொப்பம் சேகரின் உண்மையான கையொப்பம் அல்ல என்றால் சரியல்ல

இறந்து போன சேகர் உயிருடன் இருந்தபோது 1ம் பிரதிவாதிக்கும் அவருக்கும் சமாதானம் ஆகி அதன்பேரில்தான் சேகர் தாக்கல் செய்த வழக்கு வாபஸ் பெற்று தள்ளுபடி ஆகிவிட்டது என்றும் ஆனால் அவ்வாறு சேகர் 1ம் பிரதிவாதியுடன் சமாதானம் ஏற்பட்ட விவரம் எனக்கும் 4ம் பிரதிவாதிக்கும் 4ம் பிரதிவாதி குடும்பத்திற்கும் பிடிக்காமல் அதன்பேரில் உள்ள விரோதத்தின் காரணமாக இந்த பிரதிவாதிக்கு எதிராக பொய்யான வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன சேகரின் சொத்துக்கள் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு வாரிசு அடிப்படையில் கிடைக்கப்பெற்றதால் அந்த சொத்துக்களை அபகரிக்கவேண்டி வாசாஆ1 ஆவணத்தை மோசடியாக தயார்செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியை துாண்டிவிட்டு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல எனக்கு வேண்டப்பட்ட சாட்சிகளை வைத்து வசாஆ1 மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) A. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.